# இரக்கத் திருமுகம் இயேசு

**முன்னுரை**

நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்பிக்கையாளர்கள் பல்வேறு விதங்களில் பார்த்தும் அழைத்தும் மகிழ்கின்றார்கள். மீட்பர், அரசர், அன்பர், நண்பர் என பட்டியல் நீள்கின்றது. அந்த விதத்தில் நமது திருத்தந்தை இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை அறிவித்து வெளியிட்ட ஆணை ஓலையில் இயேசுவை 'இறைத் தந்தையின் இரக்கத்தின் திருமுகம்' (எண் 1) என்று அழைத்து மகிழ்கின்றார். மேலும், "நாசரேத்தூர் இயேசு தமது வார்த்தைகளாலும், செயல்களாலும் அவரின் முழு ஆளுமையினாலும், கடவுளின் இரக்கத்தை வெளிப்படுத்துகின்றார்" (எண் 2) என்கிறார் திருத்தந்தை. இந்த கருத்தை விரிவாக விளக்க முயல்கின்றது இக்கட்டுரை.

**1. குழந்தைப் பருவ நிகழ்வுகளில் இரக்கம்**

இயேசுவின் பிறப்பினால் உலகில் அல்லது உலகிற்கு நிகழும் மாற்றங்களை, உலகிற்கு கிடைத்த ஏற்றங்களை எடுத்தியம்புவதுதான் மரியாவின் புகழ்பாடல். அதில் இறைவன் "அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகின்றார்" (லூக் 1:50) என்று கூறி மரியா இறைவனின் இரக்கச் செயல்களாக செருக்குற்றோரை சிதறடித்தல், வலியோரை அரியணை நின்று அகற்றுதல், தாழ்நிலையோரை உயர்த்துதல், பசித்தோரை நலன்களால் நிரப்புதல் ஆகியவற்றைப் பட்டியலிடுகின்றார். இப்பாடலின் இறுதியில் இறைவன் "ஆபிரகாமையும் அவர்தம் வழிமரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார்" (லூக் 1:54) என்று முடிக்கின்றார். எனவே இயேசுவின் பிறப்பே இவ்வுலகுக்கு இறைவன் காட்டும் இரக்கச் செயல். இதையே "நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது" (லூக் 1:79) என செக்கரியா தம் பாடலில் வழிமொழிகின்றார்.

**2. இயேசுவின் செயல்பாடுகளில் இரக்கம்**

இயேசுவின் வாழ்நாள் முழுவதும் இரக்கச் செயல்பாடுகளால் நிரம்பியிருந்தது என்பது நற்செய்திகள் நமக்கு சொல்லும் செய்தி. அவற்றுள் சிலவற்றை மட்டும் இவண் கோடிட்டு காட்டுவோம்.

**2.1 மக்கள் கூட்டத்தின்மீது கொண்ட இரக்கம்**

இயேசுவின் செயல்பாடுகளுள் முதன்மையாய் இருப்பவை அவரின் புதுமைகள். அவற்றின் ஆதாரமாய், அவற்றிற்கு காரணமாய் அமைந்தது அவரின் இரக்கம். "திரண்டிருந்த மக்களை அவர் (இயேசு) கண்டபோது அவர்கள்மேல் பரிவுகொண்டார்; அவர்கள் ஆயர் இல்லா ஆடுகளைப் போல அலைக்கழிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டார்கள்" (மத் 9:36) என மத்தேயு குறிப்பிடுகின்றார். இந்த வசனத்திற்குமுன் இயேசு பல புதுமைகளை நிகழ்த்துவதைக் காண்கிறோம் (காண். மத் 9:20–35).

அய்யாயிரம் பேருக்கு உணவு அளித்த நிகழ்வுக்கு முன்னும் இயேசு மக்கள்மீது பரிவு கொள்வதை மத்தேயு படம் பிடித்துக் காட்டுகின்றார்: "இயேசு அங்கிருந்து புறப்பட்டுப் படகிலேறிப் பாலைநிலத்திலுள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்றார். இதைக் கேள்விப்பட்ட திரளான மக்கள் ஊர்களிலிருந்து கால்நடையாக அவரைப் பின்தொடர்ந்தனர்" (மத் 14:13). அதாவது இயேசு படகில் குறுக்காக செல்ல மக்கள் அந்த ஏரியை சுற்றிச் சென்று அவருக்கு முன் அங்கு வந்து சேர்ந்தனர். எனவே "இயேசு அங்குச் சென்றபோது பெருந்திரளான மக்களைக் கண்டு அவர்கள்மீது பரிவு கொண்டார்" (மத் 14:14). இந்தப் பரிவுதான் அவரை உடல் நலமற்றிருந்தோரை நலமாக்கச் செய்தது (காண். மத் 14:14), அப்பம் பலுகச் செய்தது (காண். மத் 14:15–21; மத் 15:32–38).

**2.2 விதவையின் மீது கொண்ட பரிவு**

இயேசு நயீன் எனும் ஊருக்கு சென்றபோது விதவைத் தாயின் ஒரே மகன் இறந்ததைக் கண்டு, "அவர்மீது பரிவு கொண்டு 'அழாதீர்' என்றார்" (லூக் 7:13). அதோடு நில்லாமல் "அருகில் சென்று பாடையைத் தொட்டார்" (லூக் 7:14). ஒரு ராபி, போதகர் இறந்த எதனுடனும் தொடர்பு கொள்ளக்கூடாது, தொடக்கூடாது என்பது யூதர்களின் மரபு, சட்டம் (காண். லேவி 11:31–32; 21:1–2).

ஆனால் இயேசு அந்தச் சட்டத்தையும்மீறி, பாடையைத் தொட்டு இறந்தவரை உயிர்ப்பித்து தாயிடம் ஒப்படைத்தார். இதற்கு அடிப்படையாய் அமைந்தது இயேசுவின் இரக்கம்.

### 2.3 தீய ஆவி பிடித்திருந்தவருக்கும் இரக்கம்

மாற்கு தீய ஆவி பிடித்திருந்த ஒரு மனிதனைப் பற்றி இவ்வாறு விவரிக்கின்றார்: "கல்லறைகளே அம்மனிதரின் உறைவிடம். அவரை எவராலும் ஒருபொழுதும் சங்கிலியால் கூடக் கட்டி வைக்க முடியவில்லை. ஏனெனில், அவரைப் பலமுறை விலங்குகளாலும் சங்கிலிகளாலும் கட்டியிருந்தும் அவர் சங்கிலிகளை உடைத்து விலங்குகளைத் தகர்த்து எறிந்தார். எவராலும் அவரை அடக்க இயலவில்லை. அவர் இரவு பகலாய் எந்நேரமும் கல்லறைகளிலும் மலைகளிலும் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்; தம்மையே கற்களால் காயப்படுத்தி வந்தார்" (மாற் 5:3–5). இத்தகைய கொடூரமான மனிதர் இயேசுவை சந்தித்தபோது இயேசு அவரை குணமாக்குகின்றார் (காண். மாற் 5:6–17). இந்நிகழ்வின் முடிவில் அம்மனிதன் இயேசுவோடு தாமும் செல்ல விரும்புவதாக தன் விருப்பத்தை வெளிப்படுத்தியபோது, இயேசு, "உமது வீட்டிற்குப் போய் ஆண்டவர் உம்மீது இரக்கங்கொண்டு உமக்குச் செய்ததையெல்லாம் உம் உறவினருக்கு அறிவியும்" என்றார் (மாற் 5:19). எனவே இயேசுவின் இந்த புதுமையும் அவரது இரக்கத்தின் வெளிப்பாடே.

### 2.4 மத்தேயுவின் அழைப்பு

திருத்தந்தை பிரான்சிஸ் மத்தேயுவை அழைத்ததிலும் இயேசுவின் இரக்கத்தைக் காண்கிறார்: "வரிவசூலிக்கும் சாவடியை கடந்து சென்ற போது இயேசு மத்தேயுவை ஆவல் கொண்டு பார்த்தார். அந்த பார்வை இரக்கம் நிறைந்ததாய் இருந்தது. . . அம்மனிதனின் பாவங்களை அந்த பார்வை மன்னித்து, மற்ற சீடர்களின் தயக்கத்தையும் தாண்டி இயேசு அவரை தனது பன்னிரு திருத்தூதர்களுள் ஒருவராக அவரை தேர்ந்து கொண்டது" (எண் 8). ஆக இயேசுவின் செயல்பாடுகளில் எல்லாம் இரக்கம் நிரம்பியிருந்தது.

## 3. இயேசுவின் போதனைகளில் இரக்கம்

இயேசுவின் செயல்பாடுகளைப் போலவே அவரின் போதனைகளிலும் இறைத்தந்தையின் இரக்கம் வெகுவாக விளக்கப்பட்டது. அவற்றுள் சிலவற்றை இவண் காண்போம்.

### 3.1 இரக்கத்தின் உவமைகள்

லூக்கா நற்செய்தியின் பதினைந்தாம் அதிகாரம் முழுவதும் இறையிரக்கத்தை விளக்கும் மூன்று உவமைகளைக் கொண்டுள்ளது (காணாமல் போன ஆடு, தொலைந்த நாணயம், இருமகன்களின் தந்தை). இவற்றுள் இருமகன்களின் தந்தையை திருத்தந்தை ஒப்புரவு அருளடையாளம் வழங்கும் குருவுடன் ஒப்பிடுகின்றார். ஒவ்வொரு குருவும் அந்தத் தந்தையைப் போல இருக்க வேண்டும் என்கிறார்: "தன் மகனை சந்திக்க விரைந்தோடிய தந்தை அவர்" (எண் 17). அதேபோல இளைய மகன் திரும்ப வந்ததில் மகிழ முடியாது வெளியிலே நின்ற இன்னொரு மகனிடமும் ஓடி அவனது நிலைப்பாடு தவறு என்று விளக்கவும் தயங்காத தந்தை அவர் (காண். எண் 17). எனவே பாவிக்கும், நீதிமான் என எண்ணிக் கொண்டிருப் போருக்கும் இரக்கமுள்ள தந்தையாய் இருக்கிறார் நம் வானகத் தந்தை என்பதே இயேசுவின் போதனையின் சாரம். இவ்விரு வகையினரும் மனம் மாற வேண்டும் என்பதே இறைவனி எதிர்பார்ப்பு.

இரக்கமற்ற ஊழியனின் உவமை (காண். மத் 18:23–35) இயேசு பேதுருவிற்கு மன்னிப்பது பற்றிக் கூறிய "ஏழுமுறை மட்டுமல்ல; எழுபது தடவை ஏழுமுறை என, நான் உனக்குச் சொல்கிறேன்" (மத் 18:22) எனும் வசனத்தை விளக்கக் கூறப்பட்டது. இதில் இரக்கம் என்பது இறைத்தந்தையின் செயல்பாடு மட்டுமல்ல, அவரின் உண்மையான பிள்ளைகள் யார் என்பதை நிர்ணயிக்கும் கருவியாகவும், அளவுகோலாகவும் திகழ்கின்றது.

### 3.2 இரக்கம் காட்ட அழைப்பு

மேலே குறிப்பிடப்பட்ட உவமையில் (காண். மத் 18:23–35) நாம் இறைத் தந்தையின் இரக்கத்தை அனுபவித்தவர்களாக மட்டும் இல்லாமல் அதை அடுத்தவர்களுக்கு அளிப்பவர்களாகவும் இருக்க அழைக்கின்றார் இயேசு. அதனால்தான் அவர் "இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்" (மத் 5:7) என தனது மலைப் பொழிவில் குறிப்பிட்டார். மேலும் இறைத்தந்தைப் போல இரக்கம் கொண்டிருக்க இயேசு அழைக்கிறார்: "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல

நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்'' (லூக் 6:36). திருத்தந்தை இதையே இந்த யூபிலி ஆண்டின் விருதுவாக்கவும் அளித்துள்ளார் (காண். எண் 14).

**4. பாஸ்கா நிகழ்வில் இறையிரக்கம்**

இயேசு தனது வாழ்நாள்களில் மட்டுமல்ல தனது பாடுகள், மரணம் உயிர்ப்பு ஆகிய தன் இறுதி நாள்களிலும் தனது இரக்கத்தை வெளிப்படுத்தினார். ''தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை'' (லூக் 23:34) என தன்னை சிலுவையில் அறைந்தவர்களை மன்னித்தும், ''நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்'' (லூக் 23:43) என தன்னோடு சிலுவையில் அறையப் பட்டவனுக்கு வான்வீட்டையும் அளித்து தன் இரக்கத்தை வெளிப்படுத்தினார். யோவான் நற்செய்தியின்படி இயேசுவின் விலாவை படை வீரருள் ஒருவன் ஈட்டியால் குத்தினான். அதிலிருந்து இரத்தமும் தண்ணீரும் வடிந்தன (காண். யோவா 19:34). எனவே இயேசு தனது இறுதித்துளி இரத்தம் சிந்தி இவ்வுலகு மீது இரக்கம் காட்டினார், அன்பு செய்தார். இதிலிருந்தே திருச்சபை தோன்றியது, திருச்சபையின் அருளடையாளங்கள் வெளிப்பட்டன என்பது நமது நம்பிக்கை (காண்: இயேசுவின் திருஇருதயப் பெருவிழா தொடக்க உரை). எனவே திருச்சபையின் இருத்தலும் அதன் அருளடையாளங்களும் அவரது இரக்கத்தின் அடையாளம். எனவே ''தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மீது அன்பு கூர்ந்தார்'' (யோவா 3:16) என யோவான் கூறுவது முற்றிலும் உண்மை.

**அருள்பணி. A. ஜான் பாப்டிஸ்ட்**